tnkalvi.online

No. of Printed Pages : **11**

6047

A

பதிவு எண்
Register Number

PART - III

பொருளியல் / ECONOMICS

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90
Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART – I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையமாக _____ விமான நிலையம் விளங்குகிறது.

(அ) சென்னை (ஆ) மும்பை (இ) பெங்களூரு (ஈ) தில்லி

The third largest international airport in India is _____.

(a) Chennai (b) Mumbai (c) Bengaluru (d) Delhi

2. ஒரு நிறுவனத்தின் உள்ளீடுகள், வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பு :

(அ) சேமிப்பு சார்பு (ஆ) நுகர்வு சார்பு

(இ) முதலீட்டுச் சார்பு (ஈ) உற்பத்திச் சார்பு

The functional relationship between "inputs" and "outputs" is called as :

(a) Savings function (b) Consumption function

(c) Investment function (d) Production function

3. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு :

(அ) 2000 - 2001 (ஆ) 1989 - 1991 (இ) 1981 - 1983 (ஈ) 1990 - 1992

Annual Plans formed in the year :

(a) 2000 - 2001 (b) 1989 - 1991 (c) 1981 - 1983 (d) 1990 - 1992

4. ஓர் அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு :

(அ) இறுதிநிலை செலவு (ஆ) மாறும் செலவு

(இ) மொத்த செலவு (ஈ) மாறா செலவு

The cost incurred by producing one more unit of output is _____ cost.

(a) marginal (b) variable

(c) total (d) fixed

5. தமிழ்நாட்டில் நீர்ப்பாசனத்தின் முக்கிய ஆதாரம் :

(அ) கிணறு (ஆ) ஆறு (இ) கால்வாய் (ஈ) குளம்

The main source of irrigation in Tamil Nadu is :

(a) well (b) river (c) canals (d) tank

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

6. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமமாக இருப்பது :

(அ) முற்றிலும் நெகிழ்ச்சியற்ற தேவை

(ஆ) அலகுத் தேவை நெகிழ்ச்சி

(இ) மிகை தேவை

(ஈ) முற்றிலும் நெகிழ்ச்சியுள்ளது

Elasticity of demand is equal to one indicates :

(a) Perfectly Inelastic Demand

(b) Unitary Elastic Demand

(c) Relatively Elastic Demand

(d) Perfectly Elastic Demand

7. தொகையீடு என்பது _____ என்பதன் தலைகீழ் செயல்பாடு ஆகும்.

(அ) கலந்த கலவை (ஆ) வேறுபாடு

(இ) வகையீடு (ஈ) கலவை

Integration is the reverse process of :

(a) Amalgamation (b) Difference

(c) Differentiation (d) Mixing

8. கீழ்க்கண்டவற்றுள் எது முற்றுரிமைப் போட்டியின் இயல்பு ?

(அ) பண்ட வேறுபாடு (ஆ) ஒரு விற்பனையாளர்

(இ) உள்ளே நுழைய முடியாது (ஈ) சில விற்பனையாளர்கள்

Which of the following is a feature of monopolistic competition ?

(a) Product differentiation (b) One seller

(c) No entry (d) Few sellers

9. கீழ்க்கண்டவற்றுள் எது முன்னேற்றம் அடைந்த நாடு ?

(அ) பிரான்ஸ் (ஆ) மெக்சிகோ (இ) ஸ்ரீலங்கா (ஈ) கானா

Which one of the following is a developed Nation ?

(a) France (b) Mexico (c) Sri Lanka (d) Ghana

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

10. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் பொழுது மொத்தப் பயன்பாடு _____ இருக்கும்.

(அ) பூஜ்ஜியமாக (ஆ) குறைவாக (இ) எதிர்மறையாக (ஈ) உச்சமாக

When marginal utility reaches zero, the total utility will be :

(a) Zero (b) Minimum (c) Negative (d) Maximum

11. ''ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்'' - இதைக் கூறியவர் யார் ?

(அ) வாக்கர் (ஆ) பென்ஹாம் (இ) J.S. மில் (ஈ) மார்ஷல்

"Wages as a sum of money are paid under contract by an employer to a worker for services rendered" - Who said this ?

(a) Walker (b) Benham (c) J.S. Mill (d) Marshall

12. ''மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது'' என்று கூறியவர் ?

(அ) ஆல்ஃபிரட் மார்ஷல் (ஆ) ஆடம் ஸ்மித்

(இ) சாமுவேல்சன் (ஈ) இலயனல் ராபின்ஸ்

"Economics is a study of mankind in the ordinary business of life" - It is the statement of :

(a) Alfred Marshall (b) Adam Smith

(c) Samuelson (d) Lionel Robbins

13. இந்தியாவில் ஊரகக் கடனுக்கு காரணமாகக் கருதப்படுவது :

(அ) அதிக உற்பத்தி (ஆ) ஏழ்மை

(இ) முழுவேலை நிலை (ஈ) அதிக மக்கள் தொகை

Identify the cause for rural indebtedness in India.

(a) High Productivity (b) Poverty

(c) Full Employment (d) High Population

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

14. இரயத்துவாரி முறை முதன் முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம் :

(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா (இ) மகாராஷ்டிரம் (ஈ) வங்காளம்

Ryotwari system was initially introduced in :

(a) Tamil Nadu (b) Kerala (c) Maharashtra (d) Bengal

15. அங்காடி என்பது :

(அ) விலைகள் சரி செய்யுமிடத்தை மட்டும் குறிக்கும்.

(ஆ) பொருள்கள் வாங்குமிடத்தை மட்டும் குறிக்கும்.

(இ) நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருள்கள் வாங்கும் விற்கும் முறையைக் குறிக்கும்.

(ஈ) பொருள்கள் விற்குமிடத்தை மட்டும் குறிக்கும்.

A market is :

(a) Only a place where prices adjust

(b) Only a place to buy things

(c) A system where persons buy and sell goods directly or indirectly

(d) Only a place to sell things

16. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது :

(அ) மதிப்புக்கூட்டப்பட்ட வரி போன்றது

(ஆ) பல முனை வரி

(இ) பலமுனை வரி மற்றும் அடுக்கு விளைவுகள் அற்றது

(ஈ) அடுக்கடுக்கு விளைவுகளைக் கொண்டது

Goods and Services Tax is _____.

(a) like value added tax

(b) a multi point tax

(c) a single point tax with no cascading effects

(d) having cascading effects

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

17. சராசரி செலவுக்கான வாய்ப்பாடு :

(அ) TVC/Q (ஆ) AVC/Q (இ) AFC/Q (ஈ) TC/Q

Identify the formula of estimating average cost.

(a) TVC/Q (b) AVC/Q (c) AFC/Q (d) TC/Q

18. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கை _____ ல் வெளியிடப்பட்டது.

(அ) ஏப்ரல் 2001 (ஆ) ஏப்ரல் 2000 (இ) ஜூலை 2001 (ஈ) ஜூலை 2000

The Special Economic Zones Policy was announced in _____.

(a) April - 2001 (b) April - 2000 (c) July - 2001 (d) July - 2000

19. குறுகிய கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது ?

(அ) சம அளவு உற்பத்திக் கோடு (ஆ) விகித அளவு விளைவு விதி

(இ) தேவை விதி (ஈ) மாறும் விகித அளவு விளைவு விதி

The short-run production function is studied through :

(a) Iso-quants (b) The Laws of Returns to Scale

(c) Law of Demand (d) The Law of Variable Proportions

20. திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துகள் குறிப்பாக கூறுவது :

(அ) வறுமை சமுதாயத்தின் சாபம்

(ஆ) வேளாண்மை

(இ) செல்வம்

(ஈ) மேற்கண்ட அனைத்தும்

Thiruvalluvar Economic ideas mainly dealt with :

(a) Poverty is the curse in the Society

(b) Agriculture

(c) Wealth

(d) All of the above

A

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

Note : Answer **any seven** questions. Q. No. **30** is **Compulsory**.

21. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக.

Name the types of utility.

22. பண்டங்களை வகைப்படுத்துக.

Mention the classification of Goods.

23. உற்பத்திச் சார்பினைக் குறிப்பிடுக.

State the Production Function.

24. வெளியுறு செலவு – வரையறுக்கவும்.

Explicit Cost - Define.

25. பகிர்வு என்றால் என்ன ?

What is meant by distribution ?

26. குறைந்த தலா வருமானமிருக்க காரணங்களாக V.K.R.V. ராவ் கூறுவதைப் பட்டியலிடுக.

List out the reasons for low Per capita income as given by V.K.R.V. Rao.

27. ஊரகப் பொருளாதாரம் – வரையறுக்கவும்.

Define Rural Economy.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

28. தமிழ்நாட்டுக்கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக் குறிப்பிடுக.
Mention any four food crops which are favourable to Tamil Nadu.

29. நிறைவுப் போட்டியின் இன்றியமையாத பண்பைக் குறிப்பிடுக.
Point out the essential features of Perfect Competition.

30. பணித்தாள் (Worksheet) என்றால் என்ன ?
What is meant by worksheet ?

பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

Note : Answer **any seven** questions. Q. No. **40** is **Compulsory**.

31. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.
Describe the features of Human wants.

32. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
What are the functions of entrepreneur ?

33. வேளாண்மைப் பொருளாதாரம் பற்றி அம்பேத்கரின் பொருளாதாரக் கருத்துகளைக் கூறுக.
State Ambedkar's economic ideas on agricultural economy.

34. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
State the reasons for nationalization of commercial banks.

35. உலகமயமாதல் என்றால் என்ன ?
What is meant by Globalization ?

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

36. வட்டார ஊரக வங்கி (RRB) பற்றி குறிப்பு வரைக.

Write a note on Regional Rural Banks (RRB).

37. சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் பொருளாதார செயல்திறனை விளக்குக.

Describe the performance of Tamil Nadu economy in health.

38. $TR = 50Q - 4Q^2$ என தரப்பட்டுள்ளது. Q=3 எனில், இறுதிநிலை வருவாயைக் காண்க.

Given $TR = 50Q - 4Q^2$. Find the marginal revenue when Q=3.

39. பொருளியலின் உட்பிரிவுகளைக் கூறி அவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றி விவரிக்கவும்.

Name the Subdivisions of economics and explain any one of them.

40. சராசரி செலவிற்கும் (AC) இறுதிநிலை செலவிற்கும் (MC) உள்ள தொடர்புகளை எழுதுக.

State the relationship between AC and MC.

பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

Note : Answer **all** the questions.

41. (அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

அல்லது

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரிக்கவும்.

(a) Compare and contrast various definitions of Economics.

OR

(b) Explain the various sources of energy in Tamil Nadu.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

42. (அ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரிக்கவும்.

அல்லது

(ஆ) 2015-2020 -ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

(a) Elucidate the Law of diminishing marginal utility with a diagram.

OR

(b) Describe the salient features of EXIM Policy (2015-2020).

43. (அ) விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.

அல்லது

(ஆ) ஊரகப் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்க.

(a) Elucidate the Laws of Returns to Scale with example.

OR

(b) Examine the problems of Rural Economy.

44. (அ) பல்வேறுபட்ட விலைநிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

அல்லது

(ஆ) நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.

(a) Bring out the relationship between AR and MR curves under various price conditions.

OR

(b) Explain the theory of 'Consumer's surplus' with the help of a diagram.

45. (அ) நிறைவுப் போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப் படுகிறது ?

அல்லது

(ஆ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையை விளக்குக.

(a) How price and output are determined under the perfect competition ?

OR

(b) Explain the public transport system in Tamil Nadu.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

46. (அ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) இறுதிநிலை உற்பத்தித் திறன் பகிர்வுக் கோட்பாட்டை விளக்குக.

(a) Explain the strong features of Indian Economy.

OR

(b) Explain the Marginal Productivity theory of distribution.

47. (அ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்-படுகின்றன ?

(a) Explain the role of SSI in economic development.

OR

(b) What are the ideas of information and communication technology used in Economics ?

- o 0 o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-economics-public-may-2022-tam-eng-set-a · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online